தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1974 சனவரி 19.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 1, 2 ஒத்திப்போடப்படுகின்றன.

Diet Sheet in use in the Government General Hospital, Madras

* 3 *Q*.—THIRU S. T. ADITYAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR); Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the diet sheet in use in the Government General Hospital, Madras, contains a column 'European Diet';

(*b*) if so whether it serves any purpose; and

(*c*) if not, whether the Government will avoid it?

சென்னை பொதுமருத்துவ மனையில் நடைமுறையிலுள்ள உணவுச் சீட்டு

திரு. எஸ். டி. ஆதித்யன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் உள்ள தமிழக அரசுப் பொது மருத்துவ மனையில் நடைமுறையிலுள்ள உணவுச் சீட்டில் 'ஐரோப்பிய உணவு' என்று அச்சடிக்கப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்குப் பயன் உண்டா?

(உ) இல்லையெனில், அதை அரசு தவிர்க்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) ஆம். அதைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

Opening of Paediatrics Wing in the Government Hospital, Madurai

* 4 *Q*.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to open a Paediatrics Wing in the Government Hospital, Madurai; and

(*b*) if so, the proposed date of its opening?

மதுரை அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்துதல்

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் ஏதும் உண்டா?

(இ) ஆமெனில், எப்போது முதல் தொடங்க உத்தேசம்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கட்டிடப் பணியைத் துவக்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders) கோரப்பட்டுள்ளன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, எர்ஸ்கின் மருத்துவமனைக்கு உள்ளேயே கட்டிடம் அமைகிறதா, அல்லது வெளியே அமைக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சரியாகச் சொல்வது என்னைப் பொறுத்த வரையில் கடினம். ஆனால் அது பெரும்பாலும் எர்ஸ்கின் மருத்துவமனையிலே சேர்ந்ததாகத்தான் இருக்கும்.